1981 ஜனவரி 27]

பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம்.

*வினா எண். 50—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் பாலாற்றின் குறுக்கே அம்மலூர் எக்லாஸ்புரத்திற்கு தரைப்பாலம் அமைக்கும் திட்டம் இருக்கிறதா?

(ஆ) அவை எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டவுடன் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? இந்தத் திட்டம் எவ்வளவு காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே 16·50 லட்ச ரூபாய் இதற்கு ஒப்பந்த முடிவு அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் ஒப்பந்தம் ஏற்பட்டு, வேலை தொடங்கப்படும். தொடங்கிய பிறகு வேலை முடியும்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பாலங்கள் கட்டப்படுகின்றபோது, வீராணம் திட்டம் கைவிடப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வி வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றியது. ஏற்கெனவே அமைச்சர் அவர்கள், இது கான்ட்ராக்டுக்கு விட்டு, கட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்று பதிலளித்து விட்டார், அடுத்த கேள்வி எண்.51.

கோடைக்கானல் பகுதிகளில் வாழைப்பயிர்.

* வினா எண். 51—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ணைக்காடு, தாண்டிக்குடி, கோடைக்கானல், அய்யன்பாளையம், பட்டிவீரன்பட்டி போன்ற பகுதிகளில் வாழைப் பயிருக்கு முடிக்கொத்து நோய் வந்து விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?